பாடம் 3

# பசிக்கு உதவி

*நீ எப்போதாவது பசியாயிருந்திருக்கிறாயா? பசியாயிருந்தபோது உனக்கு எப்படியிருந்தது? பசியைக்கூட மறந்து நீ சந்தோஷமாயிருந்த சம்பவம் ஏதேனும் உண்டா? பசியோடிருந்த 5000 பேருக்கும் அதிகமான மக்களைப் பற்றியும் தேவன் அவர்களுக்குச் செய்த மேலான அற்புதத்தையும்பற்றி இப்போது பார்ப்போமா?*

இயேசுவின் பேச்சைக் கேட்க, திரளான மக்கள் கூடியிருந்தார்கள்; 5000 பேருக்கும் அதிகமானோர்அங்கே இருந்தார்கள்; இயேசு அதிகநேரம், அவர்களுடன் தேவனுடைய அன்பைப்பற்றியும் நல்ல ஒரு வாழ்வு வாழ்வதைப்பற்றியும் அக்கறையுடன் பேசிக்கொண்டிருந்தார். மக்கள் உணவைக் கூட மறந்து இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.



ஆண்கள் மட்டுமே ஐயாயிரம் (5000) பேர் இருந்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. நிச்சயமாக அங்கே வந்திருந்த அப்பாக்களுடன், அவர்களது குடும்பத்தினரும் வந்திருப்பார்கள். அநேக அம்மாக்கள், குழந்தைகள், பாட்டிகள், தாத்தாக்களும் அங்கே நிச்சயமாக வந்திருப்பார்கள்.

அங்கே வந்திருந்தவர்களில், ஆண்கள் மட்டுமே 5000 பேர் என்றால், மற்றவர்களையும் சேர்த்துக் கணக்குப் போட்டால், எவ்வளவு பேர் இருந்திருப்பார்கள் என்று நீங்களே கணக்குப் பார்த்துக்கொள்ளுங்கள்.

மக்கள் களைப்படைந்திருப்பதை இயேசு பார்த்தார். அவர்களுக்கு உணவளிக்க விரும்பினார். சீடர்களுக்கும் இயேசுவுக்கும் கூடப் பசியாயிருந்தது. ஆனாலும் மக்களுக்கு இன்னும் தேவனைப் பற்றிச் சொல்ல

## மனன வசனம்

**நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார்.**

**மத் 14:16.**

விரும்பினார். இருப்பினும் மக்களின் பசியையும் களைப் பையும் முதலாவது நீக்க விரும்பினார்.

சீடர்கள், ‘‘மக்களைஅவ ரவர் ஊருக்கு அனுப்பி விடு வோம்; அவர்களது உணவை அவர்களே பார்த்துக் கொள்ளட் டும்; இது வனாந்தரமான இடம், இங்கே உணவுகிடைக் காது; அதுவும் ஆண்களே 5000 பேருக்கும்அதிகமாக இருக் கிறார்கள்; அதுவுமன்றி பெண் கள், குழந்தைகள் என்று இவ் வளவு திரளான மக்களுக்கு நம்மால் உணவு தரமுடியாது; அவர்களை ஊருக்கு அனுப்பி விடுவோம்’’ என்று இயேசு விடம் கூறினர்.

ஆனால், இயேசு அதற்குச் சம்மதிக்கவில்லை; ‘‘நீங்களே அவர்களுக்கு உணவுகொடுங் கள்’’ என்றார்.

சீடர்கள் யோசனையுடன் கலைந்து சென்றார்கள். சிறு பையன் ஒருவனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்க ளும் இருப்பதை அந்திரேயா பார்த்தார். அந்திரேயா அச்சிறு வனிடம் இதமாகப் பேசினார்; அச்சிறுவனும் இயேசுவுக்குக் கொடுப்பதற்கு ஆயத்தமா யிருந்தான். ஆனால், அந்த உணவு மிகச்சிறிய அளவல் லவா? அந்த உணவு எவ்வாறு போதும்? இருப்பினும், அந்த உணவை இயேசுவிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

இயேசு அந்த அப்பங்களை யும் மீன்களையும் மகிழ்ச்சி யுடன் பெற்றுக்கொண்டார். அவற்றைக் கையில் ஏந்திய வாறு வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்துப் பின் னர் அவற்றைப்பிட்டு சீடர்களி டம் கொடுத்தார்.

இயேசு சொல்லியபடியே வரிசையாகப்புல்லின்மேல் ஐம்பது ஐம்பதுபேராய் உட் கார்ந்திருந்த மக்களுக்குச் சீடர்கள் உணவைப் பரி மாறினர். யாவரும் திருப்தியாகச்



## செய்தி

**பிறருக்கு உதவும்போது நான் இயேசுவுக்குச் சேவைசெய்கிறேன்.**


சாப்பிட்டு முடித்த பின்னரும், மீதியான உணவு 12 கூடை நிறைய இருந்தது.

அன்புக் குழந்தைகளே! உங்களைப்போன்ற ஒரு சிறுவன் மனமுவந்து கொடுத்த அந்தச் சிறிய உணவு 5000 மக்களுக்கும் அதிகமானோரின் பசியை நீக்க உதவியது.

உங்களது சிறு காணிக்கையையும் நீங்கள் பிறருக்குச் செய்யும் சிறு உதவியையும் இயேசு அந்த உணவுபோன்று வெகுவாக ஆசீர்வதிப்பார்.

ஜெபக்கூட்டங்கள் ஆலயங்களில் காணிக்கை எடுக்கப்படுகிறது. அந்தக் காணிக்கை தேவனைப்பற்றி அறியாதவர்கள் தேவனை அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.

*செய்முறை:* **ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 5000 பேருக்கு இயேசு உணவளித்தார். அவர் ஆசிர்வதித்த உணவுகளை ஆசீர்வதித்து, பெருகச்செய்த உணவுகளை வண்ணமிடுக.**



**பதில் 3**